348

348

OFFICE OF ...
29 MAR 1949
MADRAS

ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் சரித்திரம்

(2-ம் பதிப்பு)

565

ஆசிரியர் :
பி. கே. மூர்த்தி, Dip. Mus.

NR ஊ1ωL67
N48
111685

...TIONS,
...s. 18.



மேலேயிருப்பது ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமியின் உருவப் படம். பசி, தாகம், சுகம் கவனியாது உண்மை பக்தியோடு, ஸங்கீதத்தை வளர்த்த மகான் இவர். சும்மாயிருப்பதே சுகம் என்று பலர் நினைக்க, பொதுக் காரியங்களிலும் கலைகளிலும் இவரைப்போல் ஊக்கத்துடன் தொண்டு செய்தவர் சிலரே. கலை வளர்ச்சி இவர்களால் செழிப்படைகிறது. அவர் எதிர் பார்க்காமலே நற்கியாதி அடைந்திருக்கிறார். சமரச சன் மார்க்க மனப்பான்மையோடு ஆரம்பத்தில் கணபதி கீர்த் தனையும், பின்னர் ஸ்ரீ ராமன்மீது கீர்த்தனைகளும், பிறகு சிவ ஸ்தோத்ர கீர்த்தனைகளும் பாடினார். சிவாலயங்கள் சென்று கீர்த்தனைகள் பாடினார். காஞ்சீபுரம் காமாக்ஷியம்மன் பேரில் பாடி விட்டு, ஏகாம்பரநாத ஸ்வாமி தரிசனம் செய்தார். அட்டை 4-ம் பக்கம்காணும் கோபுரம் ஸ்ரீ ஏகாம்பரேசுவர ஸ்வாமி கோவில். ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமையில் சுதந்திர வேரை ஊன்றி, காங்கிரசை வளர்த்து, ஹிந்து காந்தி என்று அவதாறு கூறிய முஸ்லிம் நண்பர்களின் மனதில் குடிகொள்ள கால்நடைப் பிரயாணம் செய்யும் காந்திஜியின் வாழ்க்கை, திருவையாறு மகானின் வாழ்க்கையோடு எவ்வளவு அனு சரணையாயிருக்கிறது!

(*Photos, Cover pages 1 to 3:* Courtesy, Ananda Vikatan & Naradar)

ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் சரித்திரம்

(12 ஸ்வர, ஸாஹித்திய கீர்த்தனைகளுடன்)

ஆசிரியர் :

P. K. Moorthi, Dip. Mus.

2ND EDITION

PUBLISHERS :

MOORTHY PUBLICATIONS,

MADRAS 18.

Copy right] Feb. 1947. [Price Rupee One

111685

உள்ளடக்கம்

		பக்கம் எண்
முகவுரை	...	iii
சரித்திரம்	...	1
சிஷ்ய பரம்பரை	...	31
ராமனுத பாகவதர்	...	40

கீர்த்தனைகள்

1.	கிரிராஜ ஸுதா	...	42
2.	வர நாரத	...	44
3.	ஸ்வர ராகஸுத	...	46
4.	ஸங்கீத சாஸ்த்ர	...	49
5.	மோக்ஷமு கலதா	...	51
6.	நேநெந்து வெத	...	54
7.	தாசரதே	...	57
8.	நிதிஸால ஸுகமா	...	60
9.	ராநிதி ராது	...	64
10.	நாமு ரால	...	66
11.	முந்துவெனக	...	69
12.	ஏமான திச்சேவோ	...	73
	கீர்த்தனைக் குறிப்புகள்	...	76

FOREWORD

BY

Mysore Asthana Vidwan, Sangitha Sastra Visaradha Sangitha Kalanidhi **K. Varadachariar** *(Lion), Principal, Sangitha Siromani Course, Kalakshetra, Adyar.*

"I have great pleasure in giving my hearty appreciation to popularise this little brochure, viz., 'The Life of Saint Thyagaraja Swamy' in addition to some of his selected Kritis with clear and eligible notations of a generalized type.

The life-sketch of the Sacred Saint and Singer is not only given in its faithful manner in an erudite form and also gives the general public a living picture of his highly characterized life and thus gives special mention. I, therefore, in conclusion believe that this sort of books with many more Keertanams untouched by the former may be a boon to the real lovers of music and the students of the same."

Dated 18-2-'47. (Sd) **K. Varadachari.**

Copy of Review by The Hindu, Madras on 2nd Feb. '41 over the first edition.

LIFE OF SRI THYAGARAJA SWAMI

(*by* MOORTHI)

"There is no doubt that lives of great men remind us of great things and when it is the case of a musician saint, as Sri Thyagaraja, it cannot but interest and thrill all lovers of music. He is described to have been an avatar of Valmiki. He was able to attain self-realisation through bakthi for which music was the vehicle His krithis are gems not only from the point of musical art, but also as expounding philosophic ideas. This small book in tamil gives an interesting account of the Saint's life describing the several important incidents that happened in his life.

Mr. Ramanatha Bagavathar has contributed a chapter* on the life mission of the Saint while Prof. P. Sambamurthi in a subsequent chapter traces the line of the Saint's disciples. It is a handy book worth perusal by all."

*N. B. Kritis with notations Swara by Ramanatha Bagavathar have been added in this edition substituting this chapter.

ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் சரித்திரச் சுருக்கம்

அத்தியாயம் 1

முன்னுரை

"ஸ்வர ராக ஸுதாரஸ யுதபக்தி
ஸ்வர்க்காபவர்க்கமுரா ஓ மனஸா"—

அதாவது "நல்ல ஸங்கீதம், ச்ருதிலயத்தோடு சேர்ந்து பகவதர்ப்பணமாகப் பாடினால், அதுவே உண்மையான பக்தியாகும். இந்த பக்தி சாமான்யமன்று. மோக்ஷத்தையும், சாயுஜ்ய பதவிகளையும் அடையச் செய்யும். ஆகையால், ஓ மனமே, பரிசுத்தத்தோடு பஜனை செய்" என்று மகான் தியாகராஜர் இதைப்போன்ற பல கீர்த்தனைகளிலும் பாடினதோடில்லாமல், தன் வாழ்க்கையிலேயே மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறார். சகுண மூர்த்திகளில் பேதமில்லாமல், பரப்பிரம்மமாக பாவித்து எல்லா தெய்வங்களின் மீதும் கிருதிகளைப் பாடியிருக்கிறார் அதனாலல்லவா, அவருடைய கீர்த்தனங்கள் தென்னாடெங்கும் ரத்தினங்களாகப் பிரகாசிக்கின்றன! பல விடங்களிலும் உற்சவங்கள் செய்து அவரை ப்ரும்ம ஸ்வரூபமாக பாவித்துக் கொண்டாடுகிறார்கள். அதிலும் திருவையாறென்னும் பஞ்சநத க்ஷேத்திரத்திலேயே ஸ்ரீ தியாக

ராஜ ஸ்வாமிகள் வசித்து வந்தும், முக்தியடைந்து மிருப்பதால் அவ்விடம் நடக்கும் மஹோத்சவம் மகா விசேஷம்.

இந்த மகானின் கீர்த்தனைகளின் தாத்பரியத்தை கவனித்துப் பார்த்தால் தான் அத்வைத நிலையிலேயே யிருந்து கேவலம் பாமரர்களுக்கு பக்தி ரசத்தை புகட்டியிருக்கிறார் என்றறிவோம். கீதையின் ஆழ்ந்த கருத்துக்களை—உதாரணமாக கண்ணன் அர்ச்சுன னுக்குபதேசித்த கர்மயோகம், பக்தி யோகம், ஞான யோகம் என்ற மூன்று வழிகளின் பிரகாரமே—தான் அனுபவித்தும், சிஷ்யர்களுக்கு கீர்த்தனரூபமாகப் புகட்டியும் வந்ததனாலும், இன்னும் வேதசாஸ் திரங்கள் உபநிஷத்துக்கள் இவைகளில் அடங்கிய உண்மைகளும் இவருடைய கீர்த்தனைகளின் மூலமாக வெளிப்படுவதனாலும் ஸ்வாமிகளின் கிருதிகளை "தியாகோபநிஷத்" என்றே சொல்லலாம்.

சுமார் 1100 வருஷங்களுக்கு முன் அவதரித்த சிவனடியார்கள் செய்த லீலா விபூதிகள்போல—அதாவது, திருஞானசம்பந்தர் பூநாகம் தீண்டி இறந்த பூம்பாவை யென்ற பெண்மணியை இறந்த சில காலம் கழித்து எலும்புத்துண்டங்கள் நிறைந்த குடத்திலிருந்து கலகலவென்று சலங்கை சப்தம் கேட்க உயிரோடு எழச் செய்தது போலவும், முதலை விழுங்கிய குழந்தையை சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது பக்தி ரசப் பாக்களால் உயிருடன் கொணர்ந் ததுபோலவும், நமது மகான் தியாகராஜரும் லீலா விநோதங்கள் பல செய்திருக்கிறார். க்ஷேத்ராடனம் செய்துவருங்கால் திருப்பதியிலிருந்து காஞ்சீபுரம்

போகும் மார்க்கத்தில் புத்தூர் சமீபம் கிணத்தில் விழுந்து இறந்துபோன ஒரு பிராமணனை உயிர்ப்பித்தார். பக்தியையே பிரதானமாகக்கொண்டது அவரது வாழ்க்கை; நாரதப் பிரும்மம் நேரில் தோன்றி "ஸ்வரார்ணவம்" என்ற ஸங்கீத நூலைக்கொடுத்து, அவர் மூலம் ஸங்கீதத்தை உலகுக்கு பரவச் செய்திருக்கிறார். ஆதலால், ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளை ஓர் அவதார புருஷனென்றே நாமெல்லோரும் கொண்டாடுகிறோம். அவரது திவ்விய வாழ்க்கைச் சரிதம் இங்கே சுருக்கமாகக் கூறப்படுகிறது.

அத்தியாயம் 2

பிறப்பும் வளர்ப்பும்

"கமலையில் பிறக்க முக்தி" என்ற பெரியோரின் வாக்குப்படி, நமது தியாகராஜ ஸ்வாமிகள், சுமார் 175 வருஷங்களுக்கு முன்னால், 1767-ம் வருஷத்தில் தஞ்சாவூர் ஜில்லாவில் தியாகராஜப் பெருமான் எழுந்தருளியிருக்கும் புண்ணிய க்ஷேத்திரமான—ஆரூரில், கமலாம்பாளை தேவியாகக் கொண்டதால் கமலையென்று பேர்பெற்ற திருவாரூரில், ஓர் த்ரிலிங்க வைதிக, தெலுங்கு பிராம்மணரான ராமப்பிரம்மம் என்ற பெரியாருக்கு மூன்றாவது புத்திரனாகப் பிறந்தார். அதனாலேயே தாய் தந்தையர் இவருக்கு த்யாகராஜனென்று ஈசன் நாமத்தைச் சூட்டினார்கள். முதலிரண்டு சகோதரர்களின் பெயர்கள் ஜப்யேசன், ராமநாதன் என்பதாகும். சாந்தமே உருக் கொண்ட இவருடைய அன்னை ஸீதம்மாள், பதியிடம் மிகுந்த

பக்திகொண்டு, தன் மூன்று புத்திரர்களுடன் எளிய வாழ்க்கையாயினும் கண்ணியமாகவே குடும்பத்தை நடத்தி வந்தார்.

ஸ்ரீராம பிரம்மத்தின் தந்தை அதாவது தியாகராஜ ஸ்வாமிகளின் பாட்டனார், கிரிராஜகவி யென்பார், அக்காலத்தில் தஞ்சை நகரை பரிபாலித்து வந்த "ஸஹாஜி" மகாராஜாவிடம் பெரிதும் மதிக்கப்பெற்று, சன்மானங்கள் பல பெற்றவராயிருந்தும் கூட, ராம ப்ரும்மம் பகவத் பக்தியிலீடுபட்டவராய் போக வாழ்க்கையில் மனம் செல்லாது யோக வாழ்க்கையைக் கைக்கொண்டு எம்மை ஸ்திதியிலேயேயிருந்தார். தன் கடைசி புத்திரன் தியாகராஜனின் புத்தி சாதுர்யத்தையும், ஸ்வாமி கைங்கரியங்களில் சிரத்தையையும், சம்ஸ்க்ருதம், வேத சாஸ்திரம் முதலியவைகளில் ஆர்வத்தையும் கவனித்த ராம ப்ரும்மம், தனயனுக்கேற்ற கல்வி புகட்டவும், தன் குடும்ப ரக்ஷணைக்கேற்ற சௌகரியங்கள் திருவாரூரில் கிடைக்காததால், அவைகளை விருத்தி செய்துகொள்ளவும் எண்ணி, தஞ்சைக்கு சமீபமுள்ள பஞ்சநதீச மூர்த்தியின் ஸ்தலமான, பஞ்சநத க்ஷேத்திரம் எனப்படும் திருவையாறு ஸ்தலத்தில் வசிக்கத் தீர்மானித்து அவ்விடம் தமதில்லத்தை மாற்றிக்கொண்டார்.

பற்றற்ற மனதோடு பரமனது பக்தியிலீடுபட்டு உஞ்சவிர்த்தி செய்து காலங்கழித்தார் ராமப்ரும்மம். தம் புதல்வர் மூவருக்கும் தெலுங்கு, சம்ஸ்க்ருதம் முதலிய பாஷைகளையும் வேத சாஸ்திரங்களையும் பயிலுவித்தார். உயரிய ஞானத்திலும் வேத சாஸ்திரங்களிலும் முதலிரண்டு குமாரர்களும் அவ்வள

வாக சிரத்தை காட்டவில்லை. நேர்மாறாக மூத்த குமாரரான ஜப்யேசன் தமோ குணமுடையவராய் அஞ்ஞானமும் அழுக்காறுகளும் கொண்டிருந்தார். காலக்கிரமத்தில் மூன்று குமாரர்களுக்கும் உபநயனம் நடந்தது. பால்யத்திலிருந்தே தியாகராஜனின் தெய்வ பக்தியைக் கண்ட ராமப்ரும்மம் தான் ஆராதனை செய்துவந்த ராமபட்டாபிஷேக விக்கிரஹங்களை தம் புதல்வரே பூஜைசெய்து வரும்படி ஆக்ஞாபித்தார். நாளாக ஆக, ராமபிரானின் பஜனைகளில் ஊக்கமதிக மேற்பட்டது தியாகராஜருக்கு. பஜனைக் கீர்த்தனை களை நாள்தோறும் கேட்ட இவருக்கு ஸங்கீதத்தில் பிரேமை அதிகமாயிற்று. ஆகவே, அக்காலத்தில் தஞ்சை ச ம ஸ் தா ன வித்வானாயிருந்த வீணை ஸொண்டி வெங்கடரமண தாஸரிடத்தில் ஸங்கீதப் பயிற்சி செய்ய ஏற்பாடு செய்தார் ராமப்ரும்மம். ஸொண்டி வெங்கடரமணதாஸரும் அவர்கள் வசித்து வந்த திருமஞ்சன வீதியிலேயே குடியிருந்ததால், ஸங்கீதாபிவிருத்திக்கு செளகரியமதிகமாயிருந்தது.

மூத்த பிள்ளைகளின் குணங்களைக் கண்டு வருந்தியும், தியாகராஜனின் மனநிலையைக் கண்டு மனம் பூரித்த ராமப்ரும்மம், தாம் ஜீவித்திருக்கும் காலத்திலேயே பிள்ளைகளுக்கு மணம்செய்துவிட எண்ணி, பார்வதி யென்ற பெண்ணை ஸ்வாமிகளுக்குக் கல்யாணம் செய்து வைத்தார்.—சின்னாட்கள் கழித்து, முதலில் ராமப்ரும்மமும் அடுத்த வருஷம் அவரது உத்தம பத்தினியான ஸீதம்மாளும் உயிர்நீத்தனர்.

அப்பொழுது ஸ்வாமிகளுக்கு வயது 14. ஸங்கீத குருவான வெங்கடரமண தாஸர் த்யாகராஜனின்

விசேஷ அறிவைக்கண்டு ஆச்சரியப்பட்டார். அவர் சொல்லிக்கொடுத்த ஒரு வருஷ காலத்திற்குள் ஸங்கீத நிபுணராகிவிட்டார் தியாகராஜ ஸ்வாமிகள். பெரியோர்களான புரந்தரதாஸர், ராமதாஸர், தாளப் பாக்கம் சின்னய்யா இவர்களின் கீர்த்தனைகளைப் பாடிக்கொண்டும் ராம விக்ரஹ ஆராதனைகளைச் செய்தும் காலம் கடத்திவரும் நாளில் அவருக்கு வயது 18 ஆயிற்று. அப்பொழுது விசேஷ சம்பவ மொன்று நடந்தது.

அத்தியாயம் 3

குருவுபதேசம்

காஞ்சீபுரத்திலிருந்து ராமகிருஷ்ண யதீந்திரர் என்ற மகான் ஸ்ரீ ராமச்சந்திரனின் கட்டளைப்படி திருவையாறு வந்து சேர்ந்தார். அந்த மகானை தரிசித்தார் தியாகராஜர். தன்னை வணங்கித் துதித்த தியாகராஜனின் பக்குவ மன நிலையை யுணர்ந்த யதீந்திரர், "குழந்தாய்! எல்லா மந்திரங்களிலும் தாரக நாமமே சாலச்சிறந்தது. அதை உனக்கு உபதேசிக்கிறேன். இந்த மந்திரத்தை யார் 96 கோடி ஆயுட் காலத்திற்குள் ஜபிக்கிறார்களோ அவருக்கு சாயுஜ்ய பதவி நிச்சயம். நீ அவ்விதம் செய்து முடிப்பாயாகில் உனக்கு ஸ்ரீ ராமபிரான் காட்சியளிப்பார்" என்று சொல்லி தாரக மந்திரத்தையும் உபதேசித்தார்.

அன்று முதல் த்யாகராஜ ஸ்வாமிகள் தன் தர்ம பத்தினியுடன் தினந்தோறும் அவ்வூர் தர்மாம்பிகா ஸந்நிதி சென்று வந்து, லக்ஷத்து இருபத்தையாயிரம் ராம நாமம் வீதம் ஜபித்து வரலானார்.

இதன் மத்தியில் ஸ்ரீ சீதாலக்ஷ்மண பரத சத்ருக்ன ஆஞ்சநேய ஸமேத ஸ்ரீராமனின் பேரில் ஸ்தோத்திரக் கீர்த்தனைகள் இயற்ற வேண்டுமென்று எண்ண முண்டாயிற்று. நிர் விக்னமாய் கைகூட வேண்டுமேயென்ற கவலையுடன் விக்னேச்வர மூர்த்தியின் மீது முதல் முதலாக "கிரிராஜ ஸுதா, தனய* என்ற கீர்த்தனத்தைப் பாடினார். இதற்கு இரண்டு வித அர்த்தமுண்டு. "பார்வதியின் புத்திரனே, என்னைக் காப்பாற்று" என்றும், கிரிராஜ கவியின் புத்திரனான ராமப்ருமத்தின் குமாரனான என்னைக் காப்பாற்று" என்றும் பொருள்படும். கவியின் இயல்பை அக்கீர்த்தனையிலேயே காட்டி யிருக்கிறார் த்யாகராஜ ஸ்வாமிகள்.

தியாகராஜனின் பெருமை ஓங்குவதையும், லௌகீக விருத்தியில் தாம் மட்டும் கஷ்டப்பட நேர்ந்திருப்பதையும் நினைத்த மூத்த சகோதரர்களுக்கு த்வேஷம் ஏற்பட்டது. சகோதரர்களின் மாறான மனப்போக்கை கண்ட தியாகராஜர் தாம் தனிமையாக வாழக் கருதி, பிதுரார்ஜித சொத்தில் தமக்குள்ள பாகத்தைப் பெற்றுக்கொண்டு உஞ்ச விருத்தி செய்து, யாதொரு இடைஞ்சலும் இல்லாமல் பகவானுக்குத் தொண்டு செய்யத் தொடங்கினார். தம் பாகத்திற்கு முக்கியமாக அவர் விரும்பிப் பெற்றுக் கொண்டது ஸ்ரீ ராம பட்டாபிஷேக விக்ரஹங்களைத் தான்.

இந்த சமயத்தில், தியாகராஜரின் மனைவியாரான பார்வதி அம்மாள் 5 வருஷங்கள் பர்த்தாவுடன் வாழ்ந்த பின்னர் தேக வியோகமடைந்தாள். திரா

மனச்சஞ்சலத்திலும், ராமபிரானையே துதித்து வந்த தியாகராஜருக்கு பக்தியைத் தவிர வேறொன்றும் வாழ்க்கையில் பெரிதாகப் படவில்லை. அவருடைய அரைச் சம்மதத்தோடு, பெரியவர்களெல்லோரும் சேர்ந்து, பார்வதியின் ஸஹோதரியான கமலாம்பாள் என்ற பெண்ணை ஸ்வாமிகளுக்குப் பாணிக்கிரஹணம் செய்து வைத்தார்கள்.

தினந்தோறும் ஸ்வாமிகள் பஞ்ச உஷத்காலத்தில் எழுந்திருந்து ஸ்நானாதி கர்மாக்களை முடித்துக் கொண்டு நாம ஸங்கீர்த்தனத்துடன் பிரதக்ஷணம் செய்து வந்து, விதிப்படி ராமச்சந்திர மூர்த்திக்கு அபிஷேக அலங்காரங்கள் செய்து பூஜை பண்ணியும், ராம நாம மந்திரத்தை ஜபித்துக்கொண்டும், பகவத் ஸந்நிதியில் கிருதிகளியற்றிப் பாடிக்கொண்டும், இராமச்சந்திர மூர்த்திக்கு உத்ஸவங்களும் பஜனைகளும் செய்துகொண்டு வந்தார். அவருடைய இனிமையான கீர்த்தனங்களைக் கேட்ட ஊரார் பலரும் வந்து கூடுவர். இதனால் நாளுக்கு நாள் ஸ்வாமிகளின் புகழ் பெருகலாயிற்று. அவரது பக்திக்குக் கட்டுப்பட்ட ராமபிரான், இரவில் பகவானுக்கு அர்ப்பணம் செய்து வைக்கப்பட்ட பால் பழங்களில் பாதியை உட்கொண்டு, மிச்சம் பாதியைப் பிரஸாதமாக வைத்திருப்பதைக் கண்டு எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள். ஸ்வாமிகள் மிச்சம் பாலையும் பழத்தையும் ஆனந்தத்துடன் எடுத்துண்பார்.

அத்தியாயம் 4

ஸத்குரு தர்சனம்

ஸங்கீதத்தில் ஆர்வங் கொண்ட தியாகராஜ ஸ்வாமிகள் தமது மாதாமஹராகிய வீணை காளஹஸ்தி அய்யரிடமிருந்த சில ஸங்கீத கிரந்தங்களையும் படித்து வந்தார். அந்த கிரந்தங்களை நன்ருக விளங்கும்பொருட்டு, தமது குருவான ராமகிருஷ்ண யதீந்திரரைக் கேட்டுக்கொள்ள, அவரும் நாரத மஹரிஷியை உபாஸனை செய்தால் சந்தேகங்கள் தெளிவாகுமென்று கூறி, நாரத உபாஸனு மந்திரத்தையும் உபதேசித்தார். அதன்படியே ஸ்வாமிகளும் உபாஸனை செய்து வந்தார்.

நாளுக்கு நாள் தியாகராஜரின் புகழ் எங்கும் பரவிற்று. இதைக் கண்டு சகிக்காத ஊரார் சிலர் அறியாமை கொண்டு ஸ்வாமிகளை நிந்தனை செய்ய வாரம்பித்தார்கள். சிலர் 'இவனுக்கு ஸ்வரஞானம் கிடையாது' என்று இவரது ஸங்கீதத்தை தூஷிக்கவும் ஆரம்பித்தனர். இதைக்கேட்டு மனம் வருந்திய த்யாகராஜர், அஞ்ஞானம் மிகுந்த ஜனங்களிடம் தம்மை காட்டிக்கொடுக்கலாமா வென்று இராமபிரானிடம் முறையிட்டுக் கொண்டார்.

•

இதன்பயனுய் ஒருநாள் காலை சுமார் 10 மணிக்கு சந்நியாசி யொருவர் தியாகராஜரைத் தேடிக்கொண்டு வந்தார். எண்ணெய் தேய்த்துக்கொண்டிருந்த தலையுடன் ஸ்வாமிகள் உடனே எழுந்து அந்தப் பெரியாரை வணங்கினர். சந்நியாசி அவரை

ஆசீர்வதித்து, தியாகராஜனென்ற ஸங்கீத வித்வானைப் பற்றிக் கேள்விப்பட்டு அவரைப் பார்க்க வந்திருப்பதாகக் கூற, தாம் தான் அந்த த்யாகராஜன் என்றும், தம்மை அவ்வளவு தூரம் கௌரவிக்கும் பெரியாரின் கட்டளையை சிரமேற்கொண்டு செய்யத் தயாராயிருப்பதாகவும் பதில் விடுத்தார். சந்நியாசியின் வேண்டுகோளின்படி, சில கீர்த்தனங்களை அழகாய்ப் பாடினார் த்யாகராஜ ஸ்வாமிகள். அதைக் கேட்டுப் பிரம்மானந்த மடைந்த துறவி "த்யாகராஜனே! உனது கானம் என்னை மிகவும் பரவசப் படுத்தி விட்டது. பாடுகிறவனும் கேட்கிறவனும் சேர்ந்து அனுபவிக்கக் கூடிய கான ரஸம் உன்னிடத்தில்தான் கண்டேன். இந்தச் சுவடிகளை வைத்துக் கொள். ஸ்நானம் முதலானதுகளை செய்துவிட்டு வந்து வாங்கிக்கொள்கிறேன்" என்று சொல்லி கூறி விட்டு எழுந்து சென்றார்.

நமது ஸ்வாமிகள் வெகு நேரம் சந்நியாசியை எதிர்பார்த்தும் அவரைக் காணவில்லை. பகல் முழுவதும் அவருக்காகக் காத்திருந்து, பட்டினியிருந்தார். ஊர் முழுதும் தேடினார். ஓரிடத்திலும் காணவில்லை. மனக்கவலையுடன் மாலையில் ராமனுக்குப் பூஜையை முடித்துவிட்டு ஆகார மருந்தினார். அன்றிரவில் அவரது சொப்பனத்தில் முன்னம் வந்த சந்நியாசி தோன்றி "தியாகராஜனே! நான் நாரதன். உனது குணங்களை நேரில் கண்டு மகிழ்ச்சியடைய சந்நியாசியுருக்கொண்டு காலையில் வந்தேன். உன்னிடத்தில் நான் கொடுத்துப்போன சுவடி "ஸ்வரார்ணவம்" என்ற ஸங்கீத நூல். அதை பூலோகத்தில் யாரும் அறியார். அந்த நூலைக்கொண்டு சங்கீத நுட்பங்களை

யறிந்து அந்த வித்தையின் அருமை பெருமைகளை வெளிப்படுத்துவாயாக. உன்மீது பொறாமைகொள்வோரும் இதனால் ஒழிவார்கள். இந்த நூலை பெறத் தகுதியுள்ளவன் நீ ஒருவன்தானென்று உன்னிடம் சேர்ப்பித்தேன்" என்று சொல்லி மறைந்தார்.

உடனே குதித்தெழுந்தார் ஸ்வாமிகள். சுவடியைப் பிரித்துப் பார்த்தார். சொர்ப்பனப்படியே 'ஸ்வரார்ணவ'மாயிருக்கக் கண்டு பேரானந்தமடைந்தார். நாரத முனிவரை நேரில் பார்த்துப் பூஜிக்கும் பாக்கியம் பெறவில்லையே யென்று வருந்தினார். நாரத ப்ரும்மத்தின் மகிமையை யெண்ணி யெண்ணி மனம் பூரித்து, அவர் மீது சில கீர்த்தனங்களை இயற்றிப் பாடினார். அவைகளில் முக்கியமானவை, "ஸ்ரீ நாரத" (கானடா ராகம்), "நாரத குருஸ்வாமி" (தர்பார் ராகம்), "வர நாரத" * (விஜய-ஸ்ரீ ராகம்) என்பனவாகும்.

கொஞ்சங் கொஞ்சமாக 'ஸ்வரார்ணவ' சங்கீத நூலிலிருந்து, சங்கீத உண்மைகளை ஊக்கத்துடன் கண்டு பிடித்து, மேலும் மேலும் அர்த்த புஷ்டியுள்ள கீர்த்தனைகள் பலவற்றால் ஸ்ரீராமனை ஸ்தோத்திரம் செய்து வந்தார். ஸங்கீதத்தின் மேன்மையை நன்குணர்ந்த ஸ்வாமிகள், அதன் பெருமையை உலகுக்குணர்த்தும் பொருட்டு, "ஸ்வர ராக ஸுதா ரஸ" (சங்கராபரணம்), "கீதார்த்தமு" (சுரடி), ஸங்கீத சாஸ்த்ர* ஞானமு (முகாரி), "நாதோபாஸன" (பேகடை), "மோக்ஷமு கலதா" (சாரமதி), முதலிய கீர்த்தனங்களைப் பாடியருளினார்.

அவருடைய பக்திக்கு கட்டுப்பட்டு அவரால் கொடுக்கப்படும் பால் பழம், தாம்பூலம் முதலானவை களை ஏற்றுக்கொள்ளும்படி ராம பிரானை வேண்டி "ஆரகிம்பவே" (தோடி), "விடமுஸேயவே" (கர கரப்ரிய) என்னும் கீர்த்தனைகளைப் பாடினர்.

ஸ்ரீ ஸ்வாமிகள் ராமநவமி, கிருஷ்ண ஜன்மாஷ்டமி, வைகுண்ட ஏகாதசி முதலிய விசேஷ நாட்களில் மிருதங்கம் முதலான வாத்தியங்களுடன் பஜனை செய்துகொண்டு, உஞ்சவிர்த்தி செய்து உத்ஸவங்களை நடத்தி வந்தார். பிருந்தாவனத் துவாதசியன்று துளசியம்மனைப் பூஜை செய்து பாடுவார். அம்மன் பேரில் பல கீர்த்தனைகளும் இயற்றியிருக்கிறர். நமது ஸ்வாமிகள் பஞ்ச நதீசரின் ஸப்தஸ்தான உத்ஸவத்தின்பொழுது, சில உண்மையான பக்தி நிறைந்த சிடர்களுடன் ஆலயத்திற்குச் சென்று பகவான் பேரில் உருக்கமாய்ப் பாடுவது, கண்கொள்ளாக் காட்சியாயிருக்குமாம்.

ஸ்ரீ ராம தரிசனம்

தினமும் 1,25,000 ராம நாமம் வீதம் நமது ஸ்வாமிகள் ஜபித்துக்கொண்டு வரும்பொழுது, ஒரு நாள் தன் வீட்டின் கதவை யாரோ தட்டின சப்தம் கேட்கத் திறந்து பார்த்தார். ஆ! வெளியில் தான் கண்ட காட்சிதான் என்ன! மயிர்க்கூச்செறிந்து, அந்த ஆனந்த மயமான தர்சனத்தில் பரவசமடைந்தார். விச்வாமித்திரரின் யாகத்தைக் காக்கவேண்டி ஸ்ரீ ராம லக்ஷ்மணர்கள் கௌசிக முனிவருடன் சென்ற திருக்கோலம் நமது சுவாமிகளுக்கு முன் தோன்றி

மறைந்தது. உடனே அன்புப்பெருக்கினால் ஸ்வாமிகளுக்கு பகவத் குணானுபவமான கீர்த்தனங்களை யியற்றும் சக்தியுண்டாயுற்று. உடனே அடாணா ராகத்தில் "ஏல நீ தயராது*" என்னும் கீர்த்தனத்தை மனமுருகப்பாடி ஸ்ரீ ராமனைத் துதித்தார்.

அத்தியாயம் 5

புகழ்க்கோடி

திருவனந்தபுரத்தில் ஸங்கீத வித்தையில் தேர்ச்சியடைந்த, யாதவ குலத்தினரான "கோவிந்த தாஸர்" என்றொருவர் இருந்தார். அவர் ஆறு காலங்களிலும் பல்லவி பாடுவதில் நிபுணரென்று பெயர் வாங்கினதால், ஷட்கால கோவிந்தனென்று அவரைக் கூப்பிடுவார்கள். அவருடைய கனவில் ஸ்ரீ ராம பிரான் தோன்றி "திருவையாறு சென்று தியாகராஜனைத் தரிசித்து வருவாயாக" யென்று கட்டளை யிட்டார். அவ்விதமே வந்து சேர்ந்தார் கோவிந்த தாஸர். பல பெரியோர்களின் மத்தியில் வீற்றிருக்கும் தியாகராஜ ஸ்வாமிகளைக் கண்டார். தான் வந்த விதத்தைக் கூறினார். இருவரும் தம்முடைய சங்கீதத்திறமையை வெளியிட்டுக்கொண்டனர்.

தியாகராஜரின் கானத்தைக்கேட்டு அத்யாச்சரிய மடைந்த கோவிந்த தாஸர், பக்தி, ஞானம், ஸங்கீத சாஸ்திரம் முதலியவற்றை நிலை நிறுத்தும் பொருட்டு அவதரித்த வால்மீகியின் அம்சமே தியாகராஜரென்று கொண்டாடி, அவரிடம் விடைபெற்றுக் கொண்டு 'பண்டரிபுரம்' சென்றார்.

மற்ற ராமாயணங்களில் சொல்லப்படாத சில சம்பவங்கள் இவரது கீர்த்தனைகளில் காண்கிறோம். "வாசாமகோசரமே மனஸா" "ஹரினே கெந்து வெதகுதுரா" முதலிய கீர்த்தனைகளின் தாத்பரியத்தி லிருந்து, நமது ஸ்வாமிகள் வால்மீகியின் அம்சபூத ரென்றே தெரிகிறது.

இதைப்போலவே, காசிமாநகரில் வாழ்ந்து வந்த "இராம தாஸர்" என்பவரது கனவிலும் ஸ்ரீ ராமன் தோன்றி திருவையாற்றில் தியாகராஜனைத் தரிசித்து வரும்படியாக ஆக்ஞாபித்தார். இராமேசுவர யாத் திரை செய்யத் தருணம் பார்த்திருந்த இராமதாஸர், அதுவே சமயமென்றெண்ணித் திருவையாறு வந்து சேர்ந்தார். ஸ்வாமிகளின் வித்வத் திறமையைக் கண்டு மனங்களித்து, தான் கண்ட கனவையும் கூறி, அங்கிருந்து விடை பெற்றுக்கொண்டு 'ஸேது' தர்சனம் செய்யச் சென்றார்.

இவ்விதம் ஒவ்வொருவராக ஸ்ரீ ராமபிரானால் தம்மிடம் அனுப்பப்படுவதைக்கண்ட ஸ்வாமிகள், பக்தியில் மனமுருகி, மெய்மறந்தார். "தாசரதி நீருணமு" என்னும் கீர்த்தனத்தால் "ரகுபதே! உன்னுடைய அன்பிற்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்?" என்று துதித்தார்.

இவ்விதம் பக்தி செய்துகொண்டிருக்கும் நாட் களில், 'பொப்பிலி' யென்ற தெலுங்கு நாட்டில் 'கேசவய்யா' என்று பெயர்கொண்ட ஸங்கீத வித் வான் ஒருவன், எல்லா ஊர்களுக்கும் போய் வித் வான்களை யெல்லாம் தோற்கடித்து வெற்றிகொண்ட

தாக இறுமாப்புடன் இருந்தான். திருவையாற்றிலிருக்கும் தியாகராஜரின் பெருமையைக் கேட்டு மனம் சகியாதவனாய், அவரையும் அடக்கவெண்ணி திருவையாறு வந்தான்.

தேசவய்யாவை அதிவணக்கத்துடன் உபசரித்தார் தியாகராஜர், அதை லக்ஷ்யம் செய்யாமல் "நீர் ஸங்கீத சாஹித்திய நிபுணனென்று கேள்விப்பட்டேன். அப்படியானால் என்னுடன் பாடுசிறீரா? நான் தோல்வியுற்றால் உமக்கும் ஸ்ரீ ராமனுக்கும் அடிமை. நீ தோல்வி யடைந்தால் எனக்கடிமையாக வேண்டும்" என்று அகங்காரத்துடன் வீரம் பேசினார். இதைக்கேட்ட தியாகராஜர் "ஸ்ரீ ராமா! இதென்ன சங்கடம்? உன்னை பக்தியுடன் பஜனை செய்வதில் நீ பெரியவன், நான் பெரியவன் என்றுண்டோ? பரப்ரும்ம ரகசியங்களை யுணர்ந்தவர்கள், ஸ்வரலயத்துடன் பாடத் தெரிந்த பெரியோர்கள், ஸங்கீதத்துடன் பக்தியால் பகவானைக் கட்டுப்படுத்தும் பாகவதோத்தமர்கள், குணத்தையே ஆபரணமாகக் கொண்ட மௌன யோகிகள் எத்தனையோபேர் இருக்கின்றனரே, இதில் வீராப்பு எதற்கு? நான் அவ்வளவு பேருக்கும் நமஸ்கரிக்கிறேன்" என்று பொருள்பட "எந்தரோ மஹாநுபாவுலு" என்னும் கீர்த்தனத்தை தக்ஷணமே பாடினார். "ஏழு ஸ்வரங்களின் மகிமையை யறிந்தவர்களுக்கும், பிரம்ம ரகசியத்தை அறிந்தவர்களுக்கும் நமஸ்கரிக்கிறேன்" என்று பொருள்பட "விதுலகு ம்ரொக்கெத" என்னும் கீர்த்தனத்தைப் பாடினார். "மிருதங்க தாளம் முதலிய கருவிகளோடு, ச்ருதிலயத்தோடு, ஸு-ஸ்வரமாக, பக்தியூட்டும் கீர்த்தனங்களைப் பாடி பகவானை சந்

தோஷிக்கச் செய்கிறவர்களே பாக்கியசாலிகள்" என்று பொருள்பட "ஸொகஸுகா ம்ருதங்க தாளமு" என்ற கீர்த்தனத்தைப் பாடினார்.

இந்தக் கீர்த்தனங்களைக் கேட்டவுடன் கேச வய்யாவின் மனம் உருகிவிட்டது. ஸங்கீத லக்ஷணத் தோடு மட்டும், ஸ்வரங்களுடன் மல் யுத்தம் செய்து இதுகாறும் பாடிவந்த அவர், தியாகராஜரின் லக்ஷ்யம் கலந்த ஸங்கீதத்தைக் கேட்டவுடனே அவர் உள்ளம் பக்தி வசப்பட்டது. அகந்தையை யொழித்து அன்று முதல் புது மனிதனானார். தியாகராஜ ஸ்வாமிகளை வணங்கி யெழுந்து "ஸ்வாமி! நான் குற்றம் செய்து விட்டேன். மன்னிக்கவேண்டும். இதுகாறும் என் வாழ் நாட்களை பாழ்படுத்திக்கொண்டேன்" என்று சொல்ல, ஸ்வாமிகளும் "ஐயனே! தங்கள் உள்ளத்தி லிருந்த குரோதம் ஒழிந்ததால், இனித் தங்கள் பாடல் களெல்லாம் பகவானுக் கேற்றவையாயிருக்கும். இனித்தங்கள் கீர்த்தனைகளிலெல்லாம் பகவானையே கொண்டாடுங்கள். ஸ்ரீ ராமனின் பூர்ணகடாக்ஷம் ஏற்படும்" என்று உபதேசித்து கேசவய்யாவைத் தமதிருப்பிடம் செல்ல அனுக்ரஹித்தார்.

அத்தியாயம் 6

ஸ்வாமிகளின் பற்றற்ற நிலை

அக்காலத்தில் தஞ்சைமா நகரை ஆண்டுவந்த ஸரபோஜி மகாராஜன் தியாகராஜரின் ஸங்கீத, சாஹித்திய சிறப்பைக் கேள்விப்பட்டு, தன்பேரில் ஸ்வாமிகள் கிருதிகள் செய்யவேண்டுமென்ற வெண் ணத்துடன் தன்னை வந்து பார்க்கும்படியாக சொல்லி

யனுப்பினுன். இந்த அழைப்பைக் கேட்ட ஸ்வாமிகள் "ஏ மனமே! சொல்! எது உண்மையான சுகத்தைக் கொடுக்கும்? லோக வாழ்க்கையின் சௌகரியங்களுக்காக நரனைப் புகழ்வது சுகமா? நிராசையாய், நிஷ்களங்கமாய் பக்தியுடன் பகவந்நாம பஜனையிலும் பகவத் கைங்கரியத்திலும் ஈடுபடுவது சுகமா, என்று பொருள்பட "நிதி சால சுகமா" என்னும் கீர்த்தனையைப் பாடி விட்டு, தான் வரவேண்டிய ஜோலியில்லை யென்று சொல்லி யனுப்பிவிட்டார். இந்த மொழியைக் கேட்ட சரபோஜி ராஜனுக்கு, ஸ்வாமிகளைக் காணவேண்டுமென்ற, அவா அதிகமாயிற்று. "பொருள் கொடுத்தாவது, எவ்விதமாயினும் அவரை இங்கு அழைத்து வாருங்கள்" என்று மறுபடியும் தூதர்களை யனுப்பினுன். ஸ்ரீராமனைத் தவிர, மற்ருெரு பொருளை சிறிதும் மதிக்காத ஸ்வாமிகளிடம், ராஜனின் கட்டளையைத் தெரிவிக்கப் பின்வாங்கினர் தூதர்கள். கடைசியாகத் துணிவடைந்து அரசனின் கட்டளையைத் தெரிவித்து, சேவகராகிய தம்மை மன்னிக்கும்படி வேண்டிக் கொண்டார்கள்.

"அன்பர்களே! அன்பில்லாமல் வீராப்பு மட்டும் பேசும் அரசனிடம் எனக்கு வேலை கிடையாது. நான் வரமுடியாது" என்று மறுபடியும் சொல்லியனுப்பி விட்டார் ஸ்வாமிகள்.

அரசனுக்குக் கோபம் மூண்டது. தன்னுடைய பெருமையை அவர் அறியாரென்று கர்ஜித்தான். எப்படியும் அவரைப் பிடித்து வாருங்கள் என்று ஆட்களை யேவினுன். தானரசன் என்ற இறுமாப்

புக்கொண்டு ராமபக்தனை அவமதித்ததின் காரண மாக, அவனுக்கு வயிற்று வலியால் மிகுந்த உபத் திரவம் உடனே ஏற்பட்டு விட்டது.

விவேகமும் உள்ள அரசனாதலால், தன் நோய்க் குக் காரணத்தைத் தெரிந்து கொண்டு அந்த க்ஷணமே தியாகராஜ ஸ்வாமிகளை நேரில் தரிசிக்க வெண்ணி திருவையாறு வந்து சேர்ந்து, தனதறி யாமையால் செய்த பிழையை மன்னிக்கும்படி கேட் டுக் கொண்டான். தியாகராஜ ஸ்வாமிகள் ஈசன் அற்புதத்தை வியந்து அரசனை ஆசீர்வதித்தார். வயிற்றுவலி உடனே நீங்க, அவன் மனது பக்தியி லீடுபட்டது. பின்னர் ஸ்வாமிகளை வணங்கி தந்நகர் சேர்ந்தான்.

அத்தியாயம் 7

பரமன் சோதனை

தமோகுணம் வாய்ந்த மூத்த சகோதரர்களிருவ ரும் த்யாகராஜனை நிந்திக்க வாரம்பித்தனர். "அர சனே நேரில் பேட்டிகாண வந்தும், பொருள் பறிக் கத் தெரியாமல் பக்தி, பக்தி யென்றிருக்கிறானே! சம்பாதிக்க வழி தெரியாவிட்டாலும், வீட்டில் வரு வோர் போவோரை யெல்லாம் இழுத்து வந்து அன் னம் போட்டு செலவு செய்கிறானே, இவனை எப்படி யடக்கலாம்?" என்று யோசித்தனர். ராம லக்ஷ்மண விக்ரஹங்களிருக்கும் வரையில், வீடு உருப்படா தெனத் தீர்மானித்து, அன்றிரவே ஒருவருக்கும் தெரியாமல், ஸ்ரீராமச்சந்திர பட்டாபிஷேக மகோத் ஸவ விக்ரஹங்களைத் தூக்கிக் கொண்டுபோய்,

காவேரியாற்றின் பெருவெள்ளத்தில் வீசியெறிந்து விட்டு வந்து, ஓசையின்றி படுத்துக் கொண்டார்கள்.

விடியற் காலையில் துயில் விட்டெழுந்ததும், சுவாமி தரிசனம் செய்யச் சென்ற தியாகராஜர் விக்ரஹங்களைக் காணுமல் திடுக்கிட்டார். அவரடைந்த துயரத்தை இன்னதென்று விவரிக்க முடியாது. 'ஏ பாபமுஜேஸிதிரா' (என்ன பாபம் செய்தேனோ) வென்று ராமன் பிரிவாற்ருமையால் புலம்பினுர். விக்ரஹங்களை எவராவது ஒளித்து வைத்திருக்க வேண்டுமென்றெண்ணி, இவ்விதம் தமது வீட்டில் தொந்தரவு புரியக் கூடியவர் தமது சகோதரர்களாய்த்தானிருக்க வேண்டுமென்று நினைத்து, அவர்களின் மனப்போக்கை யெண்ணி துக்கித்தார். "ஏ ராமா! அவர்களை நல்வழிப்படுத்தக் கூடாதா?" வென்ற அர்த்தத்துடன் "நாமொ ராலகிம்பவேமி" என்னும் கீர்த்தனத்தைப் பாடினுர். "ராமா! உனக்கு என்மீது தயவில்லையா? வாதனைப் படும் என்னை சோதிக்கலாமா! என் ஊழ்வினையின் பயனைக் கடக்க முடியவில்லையோ என்னுல்?" என்று பொருள்பட, "எந்துகு நிர்தய,—அந்யாயமு ஸேயகுரா,—ராணிதி ராது,*" என்ற கீர்த்தனங்களைப் பாடினுர். எங்கு விசாரித்தும் விக்ரஹங்கள் அகப்படாமையால் வேறுவகை தெரியாமல் தினமும் பல கீர்த்தனைகளைப் பாடி இராமனை நினைத்துப் புலம்பி காலத்தைக் கழித்தார் த்யாகராஜ சுவாமிகள்.

ஒரு வருஷ காலமாகியும், யாதொரு நிவர்த்தியும் காணுத தியாகராஜ சுவாமிகள் வைராக்கியம் பூண்டார். "ராமா! இனியும் உன் பிரிவைத் தாளமாட்

டேன். இச்சடல மிருப்பதில் பயனில்லை. உபவாச விரதம் பூண்டு உன்னடியை அடைகிறேன்" என்று விரதம் கொண்டார். சுவாமிகளின் பக்தியைப் பிர காசப்படுத்த வெண்ணிய ராமச்சந்திரமூர்த்தி மன திரங்கி, ஒருநாள் அவர் கனவில் தோன்றி "தியாக ராஜா! வருந்தாதே. நான் எங்குமிருப்பவன். இப் பொழுது காவேரி யாற்றின் நடுவில் மணலில் இருக் கிறேன். நான் குறிப்பிட்ட அந்த விடத்தைத் தோண்டிப் பார்த்தால் எனது விக்ரஹங்கள் கிடைக் கும்" என்று சொல்லிவிட்டு மறைந்தார்.

"ஆஹா! இப்பொழுதல்லவா பாக்கியம் பெற் றேன்? ஏ ராமா! உன் அனுக்ரஹத்தை அடைந் தேன். உன் கருணையே கருணை. உன் பிரிவைத் தாளாமல் ஏங்கி நிற்கும் எனக்கு ஜீவனளித்தாய்" என்று பலவாறுக ஈசனைத் துதித்தும், அப்பொழுதே எழுந்திருந்து காவேரி யாற்றின் கரையை அடைந் தார். கனவில் குறிப்பிட்ட இடத்தில் மண்ணைத் தோண்டிப் பார்க்க, தமது ஐயனது பஞ்சாயதன விக்ரஹங்களிருப்பதைக் கண்டு குதூகலமடைந்தார். அப்படியே விக்ரஹங்களை வாறியெடுத்து மார்மீது சாத்திக்கொண்டார். ஆனந்தக் கண்ணீர் சொரிந் தார். சற்று நேரத்தில் மனது தெளிந்து விக்ரஹங் களை எடுத்துக்கொண்டு வீடு வந்து சேர்ந்தார்.

பூஜா மண்டபத்தை அழகாக அலங்கரித்து, விக் ரஹங்களை பீடத்திலமர்த்தி அபிஷேகம் முதலிய வற்றைச் செய்து, "முத்துமோமு" "அலக லல்ல" (மத்யமாவதி) "கலிகி யுண்டின" (கீரவாணி) முத லிய கீர்த்தனங்களால் பாடித் துதித்தார். தமது

சகோதரர்களுக்கும் நற்புத்தியுண்டாக வேண்டு மென்று பகவானை வேண்டிக்கொண்டார். ராம விக்ரஹங்கள் ஒரு வருஷமான பின்னர் தாமாக அகப் பட்ட சம்பவத்தினால் ஆச்சரியமடைந்த மூத்த சகோ தரர்களும் அன்றுமுதல் தியாகராஜரோடு பஜனையில் சேர்ந்து கொண்டார்கள்.

இவ்விதம் பஜனை செய்துகொண்டு வரும்நாளில், தனது இளைய மனைவியிடம் பிறந்திருந்த பெண் ஸீதாலக்ஷ்மிக்கு கல்யாணம் செய்ய யுக்த வயது வந் திருந்தது. அப்பெண்ணை அம்மாள் அக்ரஹாரத்தில் வசித்துவந்த ஸ்ரீ குப்புஸ்வாமி அய்யரவர்களுக்குக் கன்னிகா தானம்செய்து கொடுத்தார்கள். கல்யாண காலத்தில் அநேக பெரிய மனிதர்களும் தியாகராஜ ரின் சிஷ்யர்களும் வந்திருந்து சீர்கள் செய்தார்கள். அப்பொழுது வாலாஜாபேட்டை குப்பய்யர் என் னும் சிஷ்யர், வேங்கடரமண பாகவதரின் சிஷ்யரான பல்லவி எல்லய்யரால் எழுதப்பட்ட ஸ்ரீ ஸீதா லக்ஷ் மண ஹனுமத் ஸமேத கோதண்ட ராமமூர்த்தியின் படமொன்றை சீராகக் கொடுத்தார். உடனே தியாக ராஜ ஸ்வாமிகள் அப்படத்தை மட்டும் எடுத்துக் கொண்டு பூஜையில் வைத்து "நனு பாலிம்ப" என் னும் கீர்த்தனையால் துதித்தார். இப்படம் இப் பொழுதும் திருவையாற்றி லிருக்கிறது. (பெண் ஸீதாலக்ஷ்மிக்கு 'தியாகராஜன்' என்று ஒரு புத் திரன் பிறந்தான். ஸங்கீதத் தேர்ச்சியடைந்த இப் புத்திரனும் 30-வது வயதிலிறந்ததால்; தியாகராஜ சுவாமிகளுக்கு நேர் சந்ததி கிடையாது. ஸ்வாமி களுக்கு சிஷ்யர்கள் ஏராளமாகச் சேர்ந்தார்கள். எல்லோரும் பக்தியிலீடுபட்டு குருவுடன் பஜனை

செய்து வந்தார்கள். அவருடைய கீர்த்தனங்களைக் கற்று, கர்நாடக ஸங்கீத நுட்பத்தை எங்கும் பிரகாசப்படுத்தினார்கள்.

அத்தியாயம் 8

யாத்திரை

தினமும் 1,25,000 ராம நாமம் வீதம் ஜபித்துத் தியானம் செய்துவரும் நாளில், 21 வருஷங்களில் 96 கோடி பூர்த்தியாகி, ராமநாம ஜபம் முடிவடைந்தது. ராமத்யானமே பரமானந்தம் என்ற சித்தாந்தமுள்ள ஸ்வாமிகள், பலனை யுத்தேசித்து ஜபம் செய்யாததாலும், ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தியின் கருணை அடிக்கடி தமக்கேற்பட்டு வந்ததாலும், பகவத் பக்தியான பேரானந்தத்திலேயே மூழ்கியிருந்தார். எச்சமயம் யார் மூலமாக ராமாநுக்ரஹம் கிடைக்குமோவென்று எதிர்பார்த்திருக்கும் நாளில், காஞ்சீபுரம் மடாதிபதியான உபநிஷத் ப்ரும்ம ஸ்வாமிகள் தம்மை வந்து காணும்படியாக தியாகராஜரை அழைத்தார். தியாகராஜர் ஜோதிஷ சாஸ்திரங்களில் அடைந்த கீர்த்தியைக் கேட்டு, அவரை சேவிக்க வேண்டுமென்ற அவாவினாலும், தாம் விருத்தாப்பியத்தினால் வரமுடியாததாலும், அவரை வரச்சொல்லி செய்தி அனுப்பித்தார். அவரிஷ்டப்படியே நமது ஸ்வாமிகளும் பிரதம சிஷ்யரான தஞ்சாவூர் ராமராவுடனும் இன்னும் மற்றொருவருடனும் யாத்திரை புறப்பட்டார்.

திருவொற்றியூர் வீணை குப்பய்யரவர்களின் வேண்டுதல்படி சென்னை வந்து சேர்ந்து, கோவூர் சுந்தர முதலியாரவர்களின் வீடான பந்தர் தெரு

4-ம் நெம்பர்* கிருஹத்தில் சிலநாள் தங்கி பஜனைகள் செய்துவிட்டு, திருவல்லிக்கேணி பார்த்தசாரதியை யும் திருவொற்றியூர் தியாகராஜரையும் தரிசனம் செய்துகொண்டு ஸ்ரீ சுவாமிகள் முதலியாரின் விருப் பப்படி கோவூர் சென்றார். கோவூரில் எழுந்தருளி யிருக்கும் சுந்தரேசப் பெருமான்மீது கோவூர் பஞ்ச ரத்தினம் என்ற ஐந்து கிருதிகளை யியற்றிப் பாடித் துதித்தார். ஸ்வாமிகளின் வருகையால் பரம திருப்தி யடைந்த சுந்தர முதலியார் ஆயிரம் பொன் காணிக் கையாக கொடுக்க எண்ணினார். சிறிதும் பற்றற்ற ஸ்வாமிகள் தமது காணிக்கையைப் பெற்றுக்கொள்ள மறுப்பாரென்று நினைத்து பணப்பையை யாரும் அறியாதபடி எடுத்துச் சென்று, அவர் யாத்திரை செல்லும் பல்லக்கிலுள்ள பெட்டியில் வைத்து,பிரதம சிஷ்யர்களிடம் மட்டும் இவ்விஷயத்தைக் கூறினார்.

அங்கிருந்தும் புறப்பட்டு, சிஷ்யர்களால் சுமக்கப் பட்ட பல்லக்கிலமர்ந்து, மற்ற சிஷ்யர்கள் பின் தொடர திருமலை வெங்கடேசப் பெருமானைத் தரி சிக்க வெண்ணி திருப்பதி க்ஷேத்திரம் நோக்கிச் சென்றார். நடுவழியில் காட்டு மார்க்கமாகச் செல் லும்பொழுது முரட்டுத் திருடர்கள் சிலர் பல்லக் கைச் சூழ்ந்து கொண்டு, கற்கள் வீசி சிஷ்யர்களை யெல்லாம் துன்புறுத்தினார்கள். அவர்களும் ஸ்வாமிக ளிடம் முறையிட, "ராமா! என்ன செய்வேன்? திருடர்களுக்குக் கொடுத்துதவும்படியாகவும் என் னிடம் ஒன்றுமில்லையே" வென துக்கித்தார். திரு வொற்றியூர் குப்பய்யர், சுந்தர முதலியார் வைத்

*இவ்விடத்தில் இப்பொழுது ஸ்ரீ பி. சாம்பமூர்த்தி அவர்களின் ஸங்கீத புஸ்தகசாலை யிருக்கிறது. இங்கு எல்லா வித ஸங்கீத நூல்களும் கிடைக்கும்.

திருக்கும் ஆயிரம் பொன் விஷயத்தைக் கூற, "நானறியாமல் இதை எப்படிப் பெற்றுக் கொண்டார்கள்? உடனே இப்பணத்தைத் திருடர்களிடம் கொடுத்து விடுங்கள்" என்று கட்டளை யிட்டார். அப்பொழுது மற்றொரு சிஷ்யர் "ஸ்வாமி! சுந்தர முதலியார் ராமநவமி முதலிய உத்ஸவங்களுக்காகக் கொடுத்த பணமாதலால் இது ராமனுடைய பணமாகும். நாமெப்படிக் கொடுத்துவிடலாம்?" என்று குறுக்கே பேச, "அப்படியானால் அப்பணத்தை ராமனே காப்பாற்றிக் கொள்வார். நாம் கவலைப்பட வேண்டாம்" என்று சொல்லி ஸ்ரீ ராமன் பேரில் "முந்துவெனகனிரு*" (தர்பார்) என்னும் க்ருதியைப் பாடினார்.

அதே சமயத்தில் பளிச்சென்று இரு சேவகர்கள் அவ்விடம் தோன்றினார்கள். தமது வில்லை வளைத்துத் திருடர்கள்மீது அம்புகள் எய்தார்கள். அவ்வளவில் திருடர்களெல்லோரும் செயலற்று நின்றனர். பல்லக்கின் இரு பக்கங்களிலும் நிற்கும் சேவகர்களைப் பார்த்து ஆச்சரியமடைந்தார்கள். அவர்களுடைய உள்ளம் உருகிற்று. அத்தகைய தேஜோமயமாயிருந்தது சேவகர்களின் முகம். திருடர்களின் தொந்தரவு ஒழிந்த ஸ்வாமிகளும் சிஷ்யர்களும் மேலும் செல்லலாயினர். இரு சேவகர்களும் பின்தொடர்ந்தார்கள். அவர்களைப் பார்த்தவண்ணமே கூட வந்தார்கள் மனம் மாறிய திருடர்களும்.

பொழுது விடிந்ததும் இரு வீரர்களும் ஸ்வாமிகளிடம் "இனித் திருடர் பயம் உங்களுக்கில்லை" என்று சொல்லி மறைந்தனர். இவ்விதம் சொல்லிப் போன வீரர்கள் யாரென சிஷ்யர்களைக் கேட்டார்.

அதே சமயம் திருடர்கள் ஸ்வாமிகளிடம் ஓடி வந்து, "ஐயாவே! இப்பொழுது உங்கள் பல்லக்கைக் காத்துவந்த சேவகர்கள் எங்கு சென்றார்கள்? எங்களை அம்புகளாலடித்து மடக்கி, எங்கள் மனதையும் கொள்ளை கொண்டுபோன அந்த வீரர்கள் எங்கே? அவர்களைப் பார்க்காமலிருக்க முடியவில்லையே". என்று கூறினார்கள்.

அவ்வளவில் பல்லக்கிலிருந்து கீழே குதித்தார் ஸ்வாமிகள். பணப்பையை அவர்களுக்குமுன் போட்டார். "ஏ அன்பர்களே! நீங்கள் பாக்யசாலிகள். அந்த வீரர்களை நேரில் கண்டீர்களா? இந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு அவர்களை எனக்குக் காட்டுங்கள். ஆஹா! ஸ்ரீ ராமலக்ஷ்மணர்களல்லவா அவர்கள்! அவர்களைப் பார்க்கும் பாக்யம் எனக்கில்லையே" வென்று கதறினார். திருடர்களோ "நீங்கள் பணத்தை வைத்துக் கொள்ளுங்கள். அந்த சேவகர்கள் இருக்குமிடத்தை மட்டும் சொல்லுங்கள்" என்று திருப்பிக் கேட்டனர். குருஸ்வாமிகள் "உங்களுக்கு பகவான் தரிசனம் கிடைத்தது. நீங்கள் புண்ணியசாலிகள்" என்று சொல்லி "எந்த பாக்யமு கல்கிதிவி"—(ஸாரங்கா) என்னும் க்ருதியைப் பாடினார். ஸ்ரீ ராமனது குணங்களைப் புகழ்ந்து, அவர்களுக்கும் ராம மந்த்ரோபதேசம் செய்து "இனி இத் தீயத் தொழிலை விட்டு பக்தர்களாயிருங்கள்" என்று கூறிவிட்டு மேலும் பிரயாணமானார் ஸ்வாமிகள். அன்றுமுதல் திருடர் மனம் மாறி பக்தர்களாகிப் பல தொண்டுகள் செய்தனர்.

எல்லோரும் பின்னர் திருப்பதி யடைந்தார்கள். ஸ்வாமிகள் பல்லக்கை விட்டிறங்கி, கர்மாக்களை

முடித்துக் கொண்டு திருவேங்கடப் பெருமானின் ஸந்நிதானம் சென்றார். கால பூஜையாகி விட்டதால், ஸ்ரீனிவாசப் பெருமானின்முன் திரை போடப்பட்டிருந்தது. ஸ்வாமி தரிசனம் செய்ய வேண்டுமென்று அதிகாரிகளிடம் கேட்டுக் கொள்ள, அகாலத்தில் திரைநீக்க முடியாதென்று கூறி விட்டார்கள். உடனே ஸ்வாமிகள் மனமுடைந்தவராய் "ப்ரபோ! இதென்ன காலம்! முன்னம் நீ திருடர்களுக்கீந்த தரிசனம் எனக்கு லபிக்கவில்லை. நான் முற்பிறப்புகளில் செய்த தீவினைதான் திரையாய் வந்து மறைத்ததுவோ" என்று புலம்பி "தெரதீயகராதா" (கௌளிபந்து) என்ற கீர்த்தனத்தைப் பாடினார். உடனே படாரென்று திரை அறுந்து வீழ்ந்தது. கோயிலதிகாரிகள் அதிசயித்தார்கள். பக்தியுடன் ஸ்வாமிகளுக்கு தரிசனம் செய்வித்தார்கள். "வெங்கடேச நின்னு ஸேவிம்பு" (மத்யமாவதி) என்ற கிருதியைப் பாடி ஸ்தோத்திரம் செய்தார். அவ்விடம் 4 நாட்கள் தங்கியிருந்து பகவத் ஸன்னிதானத்தில், பஜனைகள் செய்துவிட்டு காஞ்சீபுரத்திற்குப் புறப்பட்டார்.

அத்தியாயம் 9

ஸ்வாமிகளின் அற்புத சக்தி

வழியில் புத்தூர் சமீபம் வந்துகொண்டிருந்தார்கள். ஒரு தெருவில் கோயில் வாசலில் சிலர் கூட்டமாக நின்று அழுதுகொண்டிருப்பதைப் பார்த்தார் ஸ்வாமிகள். ஓர் சிஷ்யரைப் போய் விசாரிக்கச் சொல்ல அந்த சிஷ்யரும் திரும்பிவந்து "குருவே!

மனைவியுடன் திருப்பதி செல்ல ஓர் பிராமணன் இரவில் திசைதப்பி இங்கு வந்து சேர்ந்தான். காட்டு மிருகங்களின் பயத்தினால் எல்லா வீடுகளிலும் சீக்கிரமே தாளிட்டு விட்டார்கள். தங்குவதற்கு இடம் கிடைக்காத பிராமணன், கோவிலுக்குச் செல்ல, அங்கும் கதவு சாத்தியிருந்ததாம். மதிலேறிக்குதித்து தாளைத் திறப்பதாக மனைவியிடம் கூறிவிட்டு ஏறிக் குதித்தானும். குதித்தவிடத்தில் ஓர் கிணறு இருக்க, அதில் விழுந்து இறந்துவிட்டான். விடியற்காலம் இவ்விஷயத்தை அறிந்த மனைவி அங்கு அழுது கொண்டிருக்கிறாள்" என்று சொன்னார்.

இதைக்கேட்ட ஸ்வாமிகள் மனம் வருந்தி அவ்விடம் சென்று பார்க்க, இறந்த பிராமணனுடைய கழுத்தில் துளசிமாலையைப் பார்த்து 'இவன் ஓர் பக்தன் போலும்' என்று தீர்மானித்து "ஏ ராமா! பக்தர்களுக்கு இந்த கதி வரலாமா?" வென்று வருந்தி, "நாஜீவாதார (பிலஹரி) என்னும் கீர்த்தனையைப் பாடி ராமனைத் துதித்து துளஸி தீர்த்தத்தைத் தெளித்தார். அப்பொழுதே பிராமணனும் தூங்கியெழுந்தவன்போல் உயிர் பெற்றெழுந்தான். எல்லோரும் ஸ்வாமிகளுடைய திருவடியைப் பணிந்தனர். பிராமணனும் மனைவியுடனும் குழந்தையுடனும் திருப்பதியை நோக்கிப் புறப்பட்டான்.

•

அங்கிருந்து தியாகராஜ ஸ்வாமிகள் காஞ்சீபுரம் வந்து சேர்ந்து உபநிஷத்ப்ரம்ம ஸ்வாமிகளை தரிசித்தார். பின்னர் அவ்வூர் வரதராஜ ஸ்வாமியின் பேரில் "வரதராஜநினு கோரி," "வரதா நவநீதா" முதலிய கீர்த்தனங்களைப் பாடித் துதித்து, சிவாலயம்

சென்று ஏகாம்பரநாதஸ்வாமி தரிசனம் செய்து விட்டு, அங்கிருந்தும் புறப்பட்டு வாலாஜா பேட்டைக்கு வந்தார்.

அவ்வூர் வாசிகளெல்லோரும் ஸ்வாமிகளைப் பட்டணப்பிரவேசம் செய்வித்து 'வெங்கட்ரமண பாகவதர் பஜனை மந்திரத்தில்' எழுந்தருளச் செய்தார்கள். அவ்விடம் பஜனைகள் செய்துகொண்டு 10 நாட்கள் தங்கின பின்னர், விடைபெற்றுக்கொண்டு திருவையாறு வந்து சேர்ந்தார். கொஞ்ச நாட்களுக்குப் பின் ஸ்ரீரங்கம் சென்று ஸ்ரீரங்கநாதரை தரிசித்து "ஓரங்கசாயி" "ராஜுவெடலே" "ஜூதா முராரே" "வினராதனு" முதலிய கீர்த்தனங்களைப் பாடித் துதித்தார். பின்னர் திருவிடைமருதூர், கோவிந்தபுரம், நாகைப்பதி முதலிய க்ஷேத்திரங்களை தரிசித்துக்கொண்டு மறுபடியும் திருவையாறு வந்து சேர்ந்து வழக்கம்போல் ஸ்ரீராமனுக்கு உத்ஸவாதிகளை நடத்தி வந்தார். இசை நாடகங்கள் இயற்றி வெண்ணி நௌகா சரித்திரம், பிரஹ்லாத பக்தவிஜயம், சீதாராமவிஜயம் முதலிய நூல்களையெழுதினார்.

இச்சமயத்தில் ஸ்வாமிகளின் மனைவியார் விண்ணுலகு சேர்ந்தார். அவரை நினைத்து உருகி "தொலி ஜன்ம முன" (பிலஹரி), "தொலினே ஜேஸின" (சுத்தபங்காளா) முதலிய கீர்த்தனங்களைப் பாடினார்.

ஸ்ரீராம த்யானத்தின் பயனாகப் பல ஸித்திகளையடைந்த ஸ்வாமிகளுக்கு வரவர வாழ்க்கையில் பற்று குறையவாரம்பித்தது. இன்னும் எவ்வளவு நாள் பூபாரத்தைத் தாங்கவேண்டுமோ வென்று ஈசனைக்குறித்து முறையிட்டுக் கொண்டார். ஒருநாள்

ராமபிரான் அவர் முன் தோன்றி "தியாகராஜா! இன்றிலிருந்து 10-வது மாதத்தில், உன் பூவுலக வாழ்க்கை முடியும். ஆனாலும், மற்றொரு ஜன்மம் எடுத்த பின்னரே நம்மை யடையக்கூடும்" என்று சொல்லி மறைந்தார். இந்த வார்த்தையைக் கேட்ட தியாகராஜ ஸ்வாமிகள் பெரும் புயலில் அகப் பட்டவர்போல் துக்க சாகரத்தில் ஆழ்ந்தார். மறு பிறவியை நினைத்து மனம் வருந்தி "ஞான மொஸக ராதா, இதி ஸமய முரா" "க்ருப ஜூடகுவேள" முதலிய கீர்த்தனங்களைப் பாடினார்.

இப்படி மனம் வருந்தினவராய் இடைவிடாமல் கீர்த்தனைகளைச் செய்து ராமனைத்துதித்து 9 மாதங் கள் 20 நாட்கள் கழித்தார். 10 நாட்களிருக்கும் பொழுது ராமபிரான் தியாகராஜருக் கனுக்ரஹம் செய்ய மனமிரங்கி மறுபடியும் அவர்முன் தோன்றி "அன்பனே! நீ மஹா பக்தன். உனக்கு இனி வேறு ஜன்மம் கிடையாது. இன்றே சந்நியாசம் வாங்கிக் கொள். சந்நியாசாச்ரமம் ஒரு ஜென்மமாகிவிடு கிறது. இன்றைக்கு பத்தாவது நாள் என்னை யடை வாய்" என்று கூறி மறைந்தார். பரமானந்தமடைந்த தியாகராஜர் "கிரிபை நெல" (சஹானா) என்னும் கீர்த்தனத்தைப் பாடித்துதித்து அன்றே பல பாகவ தர்களுக்கும். பண்டிதர்களுக்கும் முன்னிலையில் 'பரம ஹம்ஸாச்ரமம்' பெற்றார்.

குறித்த நாளான பிரபவ வருஷம் தைமாதத்து பகுள பஞ்சமி தினம் (**6-1-1847**) வந்தது. பகல் **12** மணிக்கு பக்தர்கள், வைதீகர்கள், மற்றப் பெரி யோர்கள், இஷ்ட மித்திரர்கள் பந்துக்கள் எல்லோ ரும் கூடி நாமஸங்கீர்த்தனமும் வேதகோஷமும் செய்

